# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.59/2025 | Date | : 14.10.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : தமிழ்செல்வன் | Calling | : |
| Father Name | : போர்மணி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 14.10.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கோனேரிபட்டி கிராமம், பாலிருசம்பாளையத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 06-01-2025 ம் தேதி, மதியம் சுமா˙ 12.00 மணிக்கு என்னுடைய தாத்தா இருசா கவுண்டர் என்பவர் வீட்டில் இருந்து எடப்பாடி செல்வதற்காக அவரது TVS இருசக்கர வாகனத்தில் புறப்பட்டு சென்றார். பின்னர் அவரது வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வருவதற்காக எடப்பாடி to குமாரபாளையம் செல்லும் சாலையில் மதியம் சுமார் 02.00 மணியளவில் ஒடசக்கரை, வெங்கடேஸ்வரா பேக்கரி அருகே வலதுபக்கமாக திரும்பும்போது, பொலிரோ பிக் அப் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக சென்றாயனூரை சேர்ந்த விஷ்ணு என்பவர் எனக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னார்.

2) தகவல் அறிந்து நான் குமாரபாளையம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவருக்கு தலை, கண்புருவம், கால் முட்டி ஆகிய இடங்களில் பலத்த

அடிப்பட்டிருந்ததால் அவருக்கு அங்கு முதலுதவி சிகிச்சை எடுத்து கொண்டு, மேல்சிகிச்சைக்காக ஈரோடு KMCH மருத்துவமனையில் அவரை சேர்த்தேன். போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர், அவரை மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். பின்னர், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி அன்றைய தினமே, மாலை சுமார் 06.30 மணிக்கு இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

1) சம்பவம் நடந்தபோது நான் எங்கிருந்தேன் என்றால் வீட்டில் இருந்தேன். சம்பவம் ஒடசக்கரை வெங்கடேஸ்வரா பேக்கரிக்கு முன்பாக நடந்தது என்றால் சரிதான். எனது தாத்தா பேக்கரிக்கு செல்வதற்காக இடதுபுறத்தில் இருந்து வலதுபுறமாக ரோட்டை கடந்தபோது தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனது தாத்தா சாலையில் வாகனம் வருவதை பார்த்து கடந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான்.

2) இந்த விபத்திற்கு காரணம் எனது தாத்தா தான் என்றும், அவர் தான் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டியை சரியாக ஓட்ட தெரியாமல் ஓட்டிசென்று சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றும், விபத்திற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Tamilselvan